கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2012/ 2013 ஆகஸ்ட் - 2018

HYS 2243 History of Tamil Nadu AD 850 - 1800
HYS 2243 தமிழ்நாட்டு வரலாறு கி.பி. 850 - 1800

நேரம் : 3 மணித்தியாலங்கள்

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது. முதலாம் பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் இரண்டாம் பகுதியிலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதுக.

எழுத்துக்கள் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படலாம்.

பகுதி – I

01. " சோழர் கால செப்புப்பட்டயங்கள் மூலம் அக்கால மன்னர்களது ஆட்சிச் சிறப்புக்களையும் நன்கொடை பற்றிய செய்திகளையும் துல்லியமாக அறிய முடிகின்றது " இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் செப்பேடுகளில் கூறப்படும் செய்திகளை விபரிக்குக.

(அ) முதலாம் இராஜராஜன் காலத்து பெரிய லெய்டன் செப்பேடு (10 புள்ளிகள்)

(ஆ) முதலாம் இராஜேந்திரன் கால திருவாலங்காட்டுச் செப்பேடு (10 புள்ளிகள்)

02. " தமிழகத்துக் கட்டடக்கலை வரலாற்றில் சோழர்காலக் கோயில்கள் உன்னதமான கலைப்படைப்புக்களாகத் திகழ்கின்றன " இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் தலைப்புக்களை விளக்குக.

(அ) தஞ்சைப் பெருவுடையார் கோயில் (10 புள்ளிகள்)

(ஆ) இராஜராஜ ஈஸ்வரம் (ஜராவதேஸ்வரம்) (10 புள்ளிகள்)

03. "சோழப்பேரரசின் வீழ்ச்சியே இரண்டாம் பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கு காரணமாகும் " இக்கூற்றின் அடிப்படையில் மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ) இரண்டாம் பாண்டியப் பேரரசின் எழுச்சிக்கான காரணங்கள் (10 புள்ளிகள்)

(ஆ) இரண்டாம் பாண்டியப் பேரரசின் நிருவாகக் கட்டமைப்பு (10 புள்ளிகள்)

பகுதி – II

04. மெய்க்கீர்த்தி என்பதை விளக்கி, சோழர்கால மெய்க்கீர்த்தியின் சிறப்புக்கள் குறித்து ஒரு வரலாற்றுக் கட்டுரை எழுதுக (20 புள்ளிகள்)

05. கல்வெட்டுக்களை மூலச் சான்றுகளாகக் கொண்டு சோழர்கால வணிகப் பிரிவுகளையும் அவர்களின் அரசியல், சமய, சமூகப் பணிகளைப் பற்றியும் ஆராய்க. (20 புள்ளிகள்)

06. பிற்காலப் பாண்டியப் பேரரசின் முக்கிய மன்னர்களைக் குறிப்பிட்டு, அவர்களது ஆட்சிக்கால சிறப்புக்களை மதிப்பீடு செய்க. (20 புள்ளிகள்)

07. " விஜயநகர மன்னர்கள் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில் பல இடங்களில் தொழில் மையங்களை ஏற்படுத்தி தொழிற்கூடங்களையும் அங்காடிகளையும் அமைப்பதில் முன்னின்று செயற்பட்டனர் " இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை உதாரணங்கள் காட்டி ஆராய்க

(20 புள்ளிகள்)